செய்தி வெளியீடு எண்:179 நாள்: 25.02.11.

# மொழிவழிச் சிறுபான்மை மாணவர்கள் தமது தாய்மொழியைக் கற்பதற்கு புதிய ஏற்பாடு !

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

தமிழகத்தின் பொது மொழியான தமிழையே பள்ளிகளில் படிக்காமல்; மாணவர்கள் கல்லூரி கல்வி கற்றுப் பட்டதாரிகளாக வெளிவரும் நிலையினைத் தவிர்த்திட வேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடன்; தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு கட்டாயப் பாடமாக்கப்பட்டு (Subject) 2006 ஆம் ஆண்டில் சட்டம் இயற்றப்பட்டு, தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

இதன் காரணமாக, உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டு, தமிழகத்தில் வாழ்ந்து வரும் மொழிவழிச் சிறுபான்மையினர் (Linguistic Minorities), தமது பிள்ளைகள் தமது தாய் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பில்லை என்று முறையீடு செய்ததன் அடிப்படையில், மொழிவழிச் சிறுபான்மையினர் தமது தாய்மொழியை ஒரு பாடமாக (Subject) கூடுதலாகப் படித்துக் கொள்ளலாம் என்றும்; அதில் தேர்ச்சி பெறுவதற்குக் குறைந்தபட்ச மதிப்பெண் தேவையில்லை என்றும்; முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

இப்படி குறைந்தபட்ச மதிப்பெண் தேவையில்லை என்றால்; மொழிவழிச் சிறுபான்மை மாணவர்கள் தமது தாய்மொழியைப் படிப்பதில் தேவையான கவனம் செலுத்த மாட்டார்கள் என்றும்; எனவே, இதை மாற்றி அமைத்திட வேண்டும் என்றும் மொழிவழிச் சிறுபான்மையினர் சார்பில் அரசுக்குக் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை நன்கு பரிசீலிக்கப்பட்டது. மொழிவழிச் சிறுபான்மையினர் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகக் கற்பதோடு, கூடுதலாக உருது, கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற தமது தாய்மொழியையும் ஒரு பாடமாகக் கற்க வேண்டும் என்றும்; அதில் தேர்ச்சி பெறுவதற்கு, தமிழ்ப் பாடத்திற்கு நிர்ணயித்திருப்பதைப் போல குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயிக்கப்படும் என்றும்; முதலமைச்சர் கலைஞர் இன்று (25–2–2011) அறிவித்துள்ளார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**